## GS - Indian History (வரலாறு) QA தக்காண அரசுகள் (Deccan) Notes

### தக்காண அரசுகள்

இந்தியாவின் தெற்குப்பகுதியானது ‘தக்காணம்’ அல்லது ‘தட்சணபதம்’ என அழைக்கப்படுகிறது.
முற்கால மேலைச் சாளுக்கியர் (கி.பி.6-8 நூற்றாண்டுகள்) கி.பி.6-ஆம் நூற்றாண்டில் இன்றைய கர்நாடக மாநிலம் அமைந்துள்ள பகுதியில்

### சாளுக்கியர்கள் ( (கி.பி.6-12 நூற்றாண்டுகள்)

சாளுக்கியர்கள் தங்களது அரசாட்சியை ஏற்படுத்தினர்.
மூன்று விதமான ஆட்சி காலம்
முற்கால மேலைச் சாளுக்கியர் (கி.பி.6-8 நூற்றாண்டுகள்)
பிற்கால மேலைச் சாளுக்கியர் (கி.பி.10-12 நூற்றாண்டுகள்)
கீழைச் சாளுக்கியர் (கி.பி.7-12 நூற்றாண்டுகள்)

### முற்கால மேலைச் சாளுக்கியர் (கி.பி.6-8 நூற்றாண்டுகள்)

தற்போது பதாமி என்று அழைக்கப்படும் பிஜப்பூர் மாவட்டத்தில் உள்ள வாதாபி அவர்களுடைய தலைநகரமாய் விளங்கியது.
முதலாம் புலிகேசி (கி.பி.543-566) வாதாபி சாளுக்கிய மரபிற்கு அடித்தளமிட்டவராவர்.
சாளுக்கிய அரசர்களில் மகிச்சிறந்தவராக இரண்டாம் புலிகேசி (கி.பி.610-642) விளங்கினார்.
இரண்டாம் புலிகேசி, கங்கர், மாளவர்கள், கூர்ஜரர்கள் ஆகியோரை வென்றதோடு கி.பி.637ல் ஹர்யூரின் படையெடுப்பை எதிர்த்து நின்று வெற்றியடைந்தார்.
கி.பி.642ல் மகேந்திரனின் மகன் நரசிம்மவர்மன் இரண்டாம் புலிகேசி மீது படையெடுத்து, புலிகேசியைக் கொன்றார்.
முதலாம் விக்கிரமாதித்யன், விஜயாதித்தன், இரண்டாம் விக்கிரமாதித்யன் ஆகியோர் சாளுக்கிய மரபில் குறிப்பிடத்தகுந்த மன்னர்கள் ஆவர்.

### பிற்கால மேலைச் சாளுக்கியர் (கி.பி.10-12 நூற்றாண்டுகள்)

இரண்டாம் புலிகேசியின் சகோதரான விஷ்ணுவர்த்தன், கீழைச்சாளுக்கிய மரபைத் தொடங்கி வைத்தவராவார்.
வெங்கி இவர்களின் தலைநகராமாகும்.
இவர்கள் ஆட்சியில் தெலுங்கு சமுதாயமும், தெலுங்கு இலக்கியமும் மற்ற கலைகளும் சிறப்பான வளர்ச்சியடைந்தன.
கீழைச்சாளுக்கியர்கள், சோழமரபுடன் திருமண உறவுகளைக் கொண்டிருந்தனர்.
திருமண உறவின் வழியாக தோன்றிய வாரிசே குலோத்துங்க சோழன் (கி.பி.1070-1122).
கீழைச்சாளுக்கிய நாட்டினை சோழப்பேரரசுடன் இணைத்து சோழநாட்டு மன்னரானார். இவரே கீழைச்சாளுக்கிய மரபின் கடைசி மன்னரும் ஆவார்.

### சாளுக்கியர்களின் பங்களிப்பு

இரண்டாம் புலிகேசியின் அவைப்புலவரான இரவிகீர்த்தி ஐஹோலே கல்வெட்டுகளைப் படைத்தவராவார்.
70க்கும் மேற்பட்ட கோயில்களை ஐஹோலேவில் கட்டினர்.
ஐஹோலே ‘இந்திய கோயில் கட்டக்கலையின் தொட்டில்’ எனச் சிறப்பிக்கப்படுகிறது.
பட்டாடக் கல்லில் உள்ள விருபாக்ஷர் ஆலயம், பாதாமி குகைக் கோயில்கள் ஆகியன மற்ற சிறந்த ஆலயங்களாகும் விருபாக்ஷர் கோயில், காஞ்சிபுரத்தின் கைலாசநாதர் கோயிலைப் போலக் கட்டப்பட்டுள்ளது.


ஐஹோலே கோயில்


பட்டடக்கல் கோயில்கள்

### இராட்டிரக்கூடர்கள் (கி.பி.8-10 நூற்றாண்டுகள்)

வடஇந்தியாவில் இருந்த இரத்தோர்களின் வழிவந்தோரே இராட்டிரகூடர்கள் ஆவர்.
கன்னடம் இவர்களின் தாய்மொழியாகும்.
பதாமியை ஆண்ட இரண்டாம் கீர்த்திவர்மனின் இராட்டிர அலுவலராக இருந்த தந்திதுர்கர் கி.பி. 753ல் தக்காண பகுதியில் நிலையான அரசினை ஏற்படுத்தினார்.
இராட்டிரகூடப் பேரரசு மால்கெட் நகரைத் தலைநகராகக் கொண்டிருந்தது.
முதலாம் கிருஷ்ணா புகழ்பெற்ற எல்லோராவின் கைலாசநாதர் குடைவரைக் கோயிலை உருவாக்கினார்.
துருவன், இரண்டாம் விஜயாதித்தனை வென்று அவரது ஒன்றுவிட்ட சகோதரர் பீமா என்பவருக்கு ஆதரவாக 10 நடந்துகொண்டார்.
இவரது காலத்தில் இரட்டிரகூட நாடு புகழின் உச்சத்தை அடைந்தது.
மூன்றாம் கோவிந்தனுக்கு பிறகு, அவரின் மகன் இமோகவர்பூன் தமது பதினான்காம் வயதில் மன்னரானார்.
கிருஷ்ணர் தக்கோலம் போரில் சோழர்களை வென்று, தஞ்சாவூரை கைப்பற்றி, இராமேஸ்வரம் வரையில் வந்தார்.

### இராட்டிரக்கூடர்களின் பங்களிப்புகள்

முதலாம் கிருஷ்ணன் கைலாசநாதர் கோயிலை எல்லோராவில் கட்டினார்.
மும்பைக்கு அருகில் உள்ள எலிபண்டா குகைக்கோயிலை கட்டி முடித்தவர்கள் இராட்டிரகூடர்களே.
அமோகவர்பூன் கன்னடமொழியில ‘கவிராச மார்க்கம்’ இலக்கியத்தை படைத்துள்ளார்.
இவரின் ஆசிரியர் ஜினசேனர் என்பவர் பார்சுவநாதரின் வாழ்க்கை வரலாற்றை பார்சுவாஉதயம் என்ற நூலாக படைத்தார்.

### ஹொய்சாளர்கள் (கி.பி. 11-14 நூற்றாண்டுகள்)

இம்மரபில் குறிப்பிடத்தக்கவர் விஷ்ணுவர்தனர்.
சாளுக்கியர்களுக்கும், சோழர்களுக்கும் இடையீட்டு அரசாக கங்கவாடி திகழ்ந்தது.
இரண்டாம் வீரபல்லாளா யாதவ மரபைச் சேர்ந்த ஐந்தாம் பில்லாமாவை வென்று ஹொய்சாளர்களின் வலிமையை உறுதிசெய்தார்.
இரண்டாம் நரசிம்மன் இராமேஸ்வரத்தில் ஒரு வெற்றித்ஷணையும் நட்டார்.

### ஹொய்சாளர்களின் பங்களிப்புகள்

மைசூர் அரசு அமைவதற்கு ஹொய்சாளர் வழியமைத்துத் தந்தனர்.
துவாரசமுத்திரம், பேளுர் ஆகிய இடங்களில் ஏராளமான கோயில்களைக் கட்டினார். அக்கோயில்களில் இராமாயணம், மகாபாரத காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன.
கன்னட இலக்கியங்களின் வளர்ச்சிக்கு நியச்சந்திரா, கண்டி, ராகவங்கர், நேமிச்சந்திரன் இலக்கியங்களைப் படைத்தார்கள்.

### காகதீயர் (கி.பி. 12-14 நூற்றாண்டுகள்)

கல்யாணியை ஆண்ட மேலைச்சாளுக்கியர்களிடம் குறுநில அரசர்களாக இருந்தவர்களே காகதீயர்கள்.
இவர்களின் தலைநகராகமாக அனுமகொண்டா இருந்தது.
பிறகு வராங்கல் தலைநகராக மாற்றினர்.
அரசர் கணபதியிடமிருந்து ஆட்சி உரிமையை அவரது மகள் ருத்ராம்பாள் பெற்றார்.
காகதீயர்களின் இறுதிமன்னரான வினயகதேவன் பாமினி சுல்தான் முதலாம் முகமதுஷா என்பவரால் கொல்லப்பட்டார்.
அனும கொண்டாவில் இவர்கள் கட்டிய ஆயிரம் தூண் ஆலயம் இவர்களது கட்டட கலைக்கு நிலைத்த புகழை தரும் ஒன்றாகும்.


ஆயிரம் தூண் ஆலயம்-அனுமகொண்டா

### யாதவர்கள் (கி.பி. 12-14 நூற்றாண்டுகள்)

தேவகிரியை ஆட்சி செய்த யாதவர்கள் புராண நாயகனான கிருஷ்ண பகவானின் வழிவந்தோர் எனக் கூறிக்கொண்டனர்.
இவர்கள் செவுனர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.
இராமச்சந்திரதேவா இம்மரபின் இறுதி மன்னராவார்.
தேவகிரி கோட்டையானது யாதவர்களால் கட்டப்பட்டது.
வலிமைவாய்ந்த இந்தியக் கோட்டைகளில் இதுவும் ஒன்று.
டெல்லி சுல்தானியர்கள் இக்கோட்டைக்குள் ஜும்மா மசூதி, சாந்மினார் ஆகியவற்றை பிற்காலத்தில் கட்டினார்.
அலாவுதீன் காலத்திலிருந்து தொடர்ந்த டெல்லி சுல்தானியர்களின் தாக்குதல், இத்தக்காண அரசுகளின் வீழ்ச்சிக்கு முழுமையாக வழி வகுத்தது.
விருபாக்ஷர் ஆலயமானது கைலாசநாதர் கோயிலைப் போல கட்டப்பட்டுள்ளது.
இராட்டிரகூடர்களின் ஆட்சி துருவன் காலத்தில் உயர்நிலை அடைந்தது.
ஹாயசாள மன்னர் விஷ்ணுவர்தனர், தலைநகரை சோசவீர் என்ற இடத்திலிருந்து துவாரசமுத்திரம்க்கு மாற்றினார்.
காகதீயர் மன்னர் வினயகத்தேவன் இறப்பிற்கு பின்னர் காகதியமரபு முடிவடைந்தது.
மிகச் சிறந்த யாதவ மன்னர் சிங்கனா.